




## எமது கலாசாரத்தைப் பாதுகாப்போம்
## 2017

Tourism
Northern Province

முதலமைச்சரின் அமைச்சு
வடக்கு மாகாணம்

# வடமாகாணம்
# சுற்றுலா வழிகாட்டிகளுக்கான ஒரு கையேடு


Jaffna District
Kilinochchi District
Mullaitivu
District
Mannar
District
Vavuniya
District



## எமது நோக்கம்

ஒரு பிரதேசத்திற்கு சுற்றுலாத்துறை பலவிதமான பொருளாதார நன்மைகளை வழங்குவதால் இந்தத் துறை மக்களால் தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இருப்பதற்கு நாம் வழிநடத்துவோம்

## செய்ய வேண்டியவை
## செய்ய வேண்டாதவை

இக்கையேட்டின் நோக்கம் வடக்கிலுள்ள பாரம்பரிய கலாசாரத்தினை சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் மற்றும் இதனை வழிநடத்துபவர்களுக்கும் அறிவுறுத்துவதே ஆகும்.

சுற்றுலா வழிகாட்டிகள் செய்ய வேண்டியவை மற்றும் செய்ய வேண்டாதவற்றை சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்துவதன் மூலம் அவர்கள் தமது விடுமுறையை சுமூகமாகக் கழிக்க முடியும் என்பதை தெரியப்படுத்துவதே ஆகும்.

## கலாசாரம்

கலாசாரம் என்பது மனித குலத்தின் கதையாகும். சுற்றுலாத் துறை என்பது இக்கதையைப் பிரசுரித்து மற்றவர்களுக்கு அறிவூட்டும் நாம் பூமியில் நீண்டகாலம் நிலைத்து நிற்பதற்காக எமது சூழலைப் பாதுகாப்பது போல் நாம் வாழ்ந்த முறைகளை எமது அடுத்த சமுதாயம் அறிந்துகொள்வதற்கு எமது கலாசாரத்தினைப் பேணிப் பாதுகாப்பதே ஆகும்.

## இலங்கையின் வடக்கே எமக்கு மறக்க முடியாத அனுபவங்கள்

வடமாகாணத்தில் பல்வேறுபட்ட சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய இடங்கள் உள்ளன. அவ்வாறான வழிபாட்டுத் தலங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள், தொல்லியல் சார்ந்த இடங்கள், கடற்கரைகள், பறவைகள் சரணாலயம், வனவிலங்குப் பிரதேசங்கள் மற்றும் யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட இடங்கள் போன்றனவாகும்.

## "வணக்கம்" கூறி வரவேற்றல்

வெவ்வேறு விதமான வரவேற்பு முறைகள் உண்டு. இந்துக்கள் வணக்கம் கூறி வரவேற்கின்றனர். வணக்கம் சொல்லும் பொழுது இரு கைகளையும் கூப்பி வரவேற்கின்றனர். இவ்வாறு வரவேற்பதன் மூலம் எமது அன்பை மற்றவர்களுக்கு வெளிக்காட்டுகின்றோம். யோகாவில் இதை அஞ்சலி முத்திரை என்று கூறுவார்கள்.


எமது கைவிரல்கள் மிகவும் சக்தி கூடிய இடங்கள் ஆகும். எமது இரு கைகளையும் கூப்பும் பொழுது நரம்புச் சுற்றோட்டம் உடம்பின் மேல் பகுதியுடன் தொடர்பு கொள்கின்றது. எமது உடலில் ஒரு அமைதி பரவுகின்றது.



## வடமாகாண மக்கள்

வடமாகாணத்தில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களாகவும், சிங்கள, முஸ்லிம் இன மக்கள் சிறியளவிலும் காணப்படுகின்றனர். மேலும் பெரும்பான்மையாக இந்துக்களும் காணப்படும் அதேவேளை கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் பௌத்தர்களும் வாழ்கின்றார்கள்.






## சமயம் சார்ந்த இடங்கள்

வடமாகாணத்தில் இந்துக்கோயில்கள், பௌத்த விகாரைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன.

இவ்வழிபாட்டுத் தலங்களைத் தரிசிக்கச் செல்லும் போது முறையான உடையணிந்து செல்ல வேண்டும்.

## பனை மரம்

வடமாகாணத்தில் பனை மரம் செறிவாகக்காணப்படுகின்றது. இம் மரமானது 25 தொடக்கம் 35 மீற்றர் வரை வளர்கின்றது. அத்துடன் வீட்டுக் கூரைகளுக்கும் தளபாடங்களுக்கும் மற்றும் வேலிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.





## பனை மரத்தின் உற்பத்திகள்

பெண் பனை மரம் 100 தொடக்கம் 150 வரையான பழங்களை தருகின்றது.

இப்பனை மரத்தின் பழங்களில் இருந்து பலவிதமான உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது. உதாரணமாக பனங்கட்டி, பினாட்டு, பனங்காய் பணியாரம், ஒடியல் போன்றன.

## தொட்டுணர முடியாத கலைகள்

கூத்து, சிலம்பம், சடங்குகள், உணவுப் பாரம்பரியம், நாட்டியம், சம்பிரதாயம், மதம் சார்ந்த விடயங்கள்.



## தொட்டுணரக்கூடிய கலைகள்

கோயில்கள், கோட்டைகள், தொல்லியல் மையங்கள் , மடங்கள்.





## கிராமிய வாழ்க்கை

வடமாகாணத்தில் சுற்றுலாப் பயணிக்கு கிராமிய வாழ்க்கை முறையைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

## இந்துக் கோயில்கள்

இந்துக் கோயில்களுக்கு ஆண்கள் செல்லும் போது அவர்கள் மேலாடைகள் இன்றி செல்ல வேண்டும்.



## வழிபாட்டுத்தலங்கள்

வடமாகாணத்தில் சகல வழிபாட்டுத் தலங்களுக்கும் உட்செல்லும்போது பாதணிகள் இன்றி செல்ல வேண்டும். இது கிறிஸ்தவ தேவாலயங்கள் உள்ளிட்ட சகல வழிபாட்டுத்தலங்களுக்கும் பொருந்தும்.



## வழிபாட்டுத்தலங்கள்


வழிபாட்டுத்தலங்களில் உள்ள சிற்பங்களையோ, சிலைகளையோ தொடக்கூடாது.



## வழிபாட்டுத்தலங்கள்

சில வழிபாட்டுத்தலங்களில் புகைப்படம் எடுப்பது தடைசெய்யப் பட்டுள்ளது. எனவே புகைப்படம் எடுப்பதற்கு முன்பு வழிபாட்டுத்தலங் களின் நிர்வாகிகளிடம் அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும்.





## வழிபாட்டுத்தலங்கள்

கோவிலுக்கு கொண்டு செல்ல முடியாத பொருட்களை பாதுகாப்பான இடத்தில் மட்டும் வைத்துச்செல்லவும்

## பல்வேறுபட்ட மரக்கறிகளும் பழங்களும்

மரக்கறிகள் : கிழங்கு வகைகள், வெங்காயம், மிளகாய், முருங்கைக்காய், கத்தரி, வெண்டி, பூசணி, பாகற்காய்.

பழங்கள் : முந்திரிகை, மாம்பழம், பலாப்பழம், விளாம்பழம், வாழைப்பழம், ஈச்சம்பழம், நாவற்பழம்.



## விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்கள்

வடமாகாணத்தில் பிரதான இரு துறைகளாக விவசாயமும், மீன்பிடித் துறையும் காணப்படுகின்றன.





## வடமாகாண மக்களின் உடை

வடமாகாண மக்கள் மிகவும் சீரான உடை அணிபவர்கள். கிராமங்களிலும் இதேபோல் மிகவும் சீரான உடை அணிந்திருப்பார்கள்.

## பாடசாலைகள்

வடமாகாணத்தில் பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு தொடங்கி 1.30 மணிக்கு முடிவடைகின்றது.



## பாடசாலைச் சீருடை

சகல பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு சீருடை உண்டு.



## கல்வி

மாணவர்கள் பாடசாலை செல்வதற்குப் பெரும்பாலும் துவிச்சக்கர வண்டியையே உபயோகிப்பார்கள்.



## காலநிலை

வடமாகாணம் பொதுவாக வெப்பநிலை கூடிய சூழ்நிலையைக் கொண்டது. ஐப்பசி தொடக்கம் மாசி வரை மழை காலமாகக் காணப் படுகின்றது.



## தைப்பொங்கல் திருவிழா

தை மாதத்தில் கொண்டாடப்படும் ஒரு கலாசார திருவிழா தைப்பொங்கல் ஆகும். விவசாயத்திற்கு உதவி செய்கின்ற சூரிய பகவானுக்கு உழவர்கள் நன்றி செலுத்தும் திருவிழா ஆகும். அதிகாலையில் சூரிய பகவானுக்குப் பொங்கல் செய்து வழிபாடு மேற்கொள்ளப்படும்.





## பட்டிப்பொங்கல்

தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் விவசாயத்திற்கு உதவி செய்கின்ற மாட்டிற்கு நன்றிக் கடன் செலுத்தும் முகமாகக் கொண்டாடப்படும் திரு விழா இதுவாகும்.



## மாட்டுவண்டிச் சவாரி

வடமாகாணத்தில் பல இடங்களிலும் மாட்டுவண்டிச் சவாரிகள் நடை பெறுகின்றது.

## பாத யாத்திரை

வழிபாட்டுத் தலங்களுக்கான பாத யாத்திரைகள் வடமாகாணத்திலே மேற்கொள்ளப்படுகின்றன. யாத்திரை என்பது பக்தியுடன் நீண்ட தூரத்திற்கு வழிபாட்டுத் தலங்களை நோக்கிச் செல்லும் பயணமாகும்.

கதிர்காம பாத யாத்திரை என்பது செல்வச்சந்நிதி கோயிலில் இருந்து கதிர்காம முருகன் கோயிலுக்கு கடற்கரையோரமாக கிட்டத்தட்ட 400 கிலோ மீற்றர் பயணம் செய்வதாகும். இவ் 45 நாள் பயணமானது கதிர்காம முருகன் கோயில் வருட உற்சவ தொடக்க நாளன்று முடிவடையும்.

மகா சிவராத்திரி தினத்தன்று மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு இலங்கையின் பல திசைகளிலுமிருந்து பாத யாத்திரை யாகச் சென்றடைவார்கள்.



## தானியங்கள் அரைக்கும் முறைகள்

தானியங்கள் அரைக்கும்பொழுது, இது உடலுக்கு ஒரு அப்பியாசமாகவும் விளங்குகின்றது.





## ஜோதிடம்

மக்கள் புதிய காரியங்களைத் தொடங்கும் பொழுது ஜோதிடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மிகச்சிறந்த நேரங்களில் மேற்கொள்வர்.

எந்தவொரு நாளிலும் ஜோதிடத்தின் படி ஒரு காரியத்தை மேற்கொள்வதற்கான நல்ல நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் பல ஜோதிட நிலையங்கள் உண்டு.





## சித்த வைத்திய முறை

வடமாகாணத்தில் பாரம்பரியமாக சித்த வைத்தியம் நடைமுறையில் இருந்து வருகின்றது.

## பொருட்கள் கொள்வனவு செய்தல்


சுற்றுலாப் பயணிகள் கடைகளில் விற்பனைக்குள்ள பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும். பழைமையான பொருட்களை வாங்குவதற்கு சில சட்ட விதிமுறைகள் உண்டு.

இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்களை அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் மட்டும் கொள்வனவு செய்ய முடியும். இலங்கையில் இருந்து வெளிநாட்டிற்கு சில பொருட்களைக் கொண்டு செல்வதற்கு சில விதிமுறைகள் உண்டு.



## ஆடைகள் இன்றி நீராடல்

கடற்கரைகளில் அல்லது பொது இடங்களில் மக்கள் ஆடையின்றி நீராடுவதைத் தவிர்க்க வேண்டும்.



## புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துதல்

பொது இடங்களில் புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துதல் தவிர்க்கப்படல்வேண்டும். பௌர்ணமித் தினங்களில் சகல மதுபான விற்பனைக் கடைகளும் மூடப்பட்டிருக்கும்.





## விபச்சாரம், சிறுபிள்ளைகள் துஸ்பிரயோகம் மற்றும் ஓரினச்சேர்க்கை தவிர்க்கப்படல் வேண்டும்




## பொதுச் சொத்துக்களினைச் சேதப்படுத்துதல் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்



## குப்பை

எப்பொழுதும் கழிவுகளை குப்பைத்தொட்டிகளில் போடுதல் வேண்டும்.



## வாகனங்கள் ஓட்டும் போது குறிப்பிட்ட வேகத்திற்குள் செல்லவேண்டும்




## மீன் வகைகள்

பாரை, திருக்கை, சுறா, விளை, சூடை, கும்பிளா, இறால், நண்டு, கணவாய். ஆடி மாதம் 1ம் திகதி மக்கள் ஆடிக்கூழ் குடிப்பது ஒரு பாரம்பரியப் பழக்கமாகும்



## உணவு

பொதுவாக மக்கள் தமது உணவை கையால் உண்பார்கள். சில இடங்களில் உணவு வாழையிலைகளில் பரிமாறப்படும். வடமாகாணத்தில் பொதுவாக சைவ உணவகங்கள் காணப்படுகின்றன. சுற்றுலா விடுதிகள் மற்றும் வாடி வீடுகளில் உணவு உண்பதற்கு கரண்டி மற்றும் முள்ளுக்கரண்டி வழங்கப்படுகின்றது.



## சந்திர நாட்காட்டி

சந்திரன் இருக்கும் நிலையினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாட்காட்டியினை இந்துக்களும், பௌத்தர்களும் பயன்படுத்துகின்றனர்.

இந்துக்கள் மற்றும் பௌத்தர்களின் திருவிழா தினங்கள் சந்திர நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டது.



## புதுவருடத் திருவிழா

சித்திரை முதலாம் திகதி இலங்கையில் புதுவருடம் கொண்டாடப்படும். இத்தினத்தன்று மக்கள் புதிய புத்தாடை அணிந்து வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வார்கள்.



## வீடுகளுக்கு விருந்தினராகச் செல்லுதல்

வீடுகளுக்குச் செல்லும் போது காலணிகளை வெளியில் கழற்றி உட் செல்லுதல் எமது சம்பிரதாயமாகும்.



## ஒரு திருமண தினத்தில் பல ஜோடிகள்

பருத்தித்துறையிலுள்ள செல்வச்சந்நிதி கோவிலில் திருமணம் செய்து கொள்வது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகின்றது.

இக்கோவிலில் ஒரே நேரத்தில் பல திருமணங்கள் நடைபெறுவது ஒரு சிறப்புமிக்க அம்சமாகும்.



## ஒவ்வொருநாளும் அன்னதானம்

பௌர்ணமி மற்றும் கோவில் வருடாந்த உற்சவ தினங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவது ஒரு பாரம்பரியமாகும். வடமாகாணத்தின் பருத்தித்துறையிலுள்ள செல்வச்சந்நிதி கோவில் மற்றும் நயினாதீவு நாகபூசனி அம்மன் கோவிலில் ஒவ்வொருநாளும் அன்னதானம் வழங்கப்படுகின்றது.




## மேளதாளம்

திருவிழாக்களின் போது வித்தியாசமான ஒலியினைக் கொண்டு மேளம் தாளம் பாவிக்கப்படும். கோவில்களில் தவில் மற்றும் நாதஸ்வரம் பாவிக்கப்படுகின்றது.



## மரணச் சடங்கு வீடுகளில் வித்தியாசமான மேளங்களும் பாவிக்கப்படுகின்றது





வட மாகாணத்திற்கு சுற்றுலாவை மேற்கொண்டு எமது பாரம்பரிய கலாசாரத்தை கண்டு மகிழவும்



Prepared by :

S.Kalaiselvam

(Former Director General Sri Lanka Tourism Development Authority)

Tourism Unit Chief Minister's Ministry Northern Province

Supported by :

The United Nations Development Programme

through the

Northern Livelihood Development Project III

funded by the Government of Norway

PRINT@ANDRA PRINTERS